# பாடல் 1: பலியிது பலியிது (காணிக்கை)

இயல்: திரு.கிறிஸ்து ராஜன்
இசை: செல்வி.நிஷா
பாடியவர்கள்: செல்வி டெய்சி என்சோன்
இசை இயக்கம்: Fr..டெனிஸ் வாய்ஸ்

## பல்லவி

பலியிது பலியிது பரமனின் பலியிது

பணிவுடன் தருகின்றேன் கனிவுடன் ஏற்றிடு

மரணத்தை வென்றுயிர்த்த தியாக செம்மலே

மீண்டும் உன் வருகைக் கென்று காத்திருக்கின்றேன்

தாழ்ச்சியுடன் தேடி வந்தேன், பாதப் படியினிலே

தயவுடன் ஏழை என்னை ஏற்றுக் கொள்ளுமே, ஏற்றுக் கொள்ளுமே.

## சரணம்

1.நீர் தந்த இயற்கையில், என் உழைப்பினை இணைத்தேன்

நான் கண்ட முதற்பலன் உனக்கென படைத்தேன்

இருப்பதைக் கொடுக்கின்றேன், இனிய நல் இயேசுவே

இருக்கின்ற நிலையினில் ஏற்றிடு என் தேவனே, ஏற்றிடு என் தேவனே.

## சரணம்

2.நீர் தந்த மறைபொருள் உணர்ந்திட முனைந்தேன்

நான் எந்தன் மனதினை உவப்புடன் படைத்தேன்

இதயத்தைக் கொடுக்கின்றேன் இனிய நல் இயேசுவே

இதையும் உம் பலியினில் ஏற்றிடு என் தேவனே, ஏற்றிடு என் தேவனே.

This song is prepared for Iniya Ithayangal Whatsapp group and linked in www.manavai.com